# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தேரவாத பிக்குமார்கள் கதிகாவத்
## (பதிவு செய்தல்)

**இலங்கையிலுள்ள தேரவாத பிக்குமார்களின் நிகாயாக்கள் அல்லது மதப்பிரிவுகள் தொடர்பாக கதிகாவத்தை வகுத்தமைத்து பதிவு செய்வதற்கும்; பிக்கு ஒவ்வொரு வருடனும் எந்த நிகாயா அல்லது மதப்பிரிவு தொடர்புபடுகின்றதோ அந்த நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் பதிவு செய்யப்பட்ட கதிகாவத் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக செயலாற்றுவதற்கு அத்தகைய பிக்குவுக்கு ஏற்பாடு செய்வதற்கும்; ஏதேனும் பதிவு செய்யப்பட்ட கதிகாவத்தின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற பிக்குமாருக்குத் தண்டனை விதிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*புத்தசாசன அமைச்சர் அவர்களால் 2016, சனவரி மாதம் 12 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, திசெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **60 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 009642 -475 (2016/01)

# தேரவாத பிக்குமார்கள் கதிகாவத்
# (பதிவு செய்தல்)

*ச.வ.ஒ. 15/2014*

**இலங்கையிலுள்ள தேரவாத பிக்குமார்களின் நிகாயாக்கள் அல்லது மதப்பிரிவுகள் தொடர்பாக கதிகாவத்தை வகுத்தமைத்து பதிவு செய்வதற்கும்; பிக்கு ஒவ்வொருவருடனும் எந்த நிகாயா அல்லது மதப்பிரிவு தொடர்பு படுகின்றதோ அந்த நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் பதிவு செய்யப்பட்ட கதிகாவத் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக செயலாற்றுவதற்கு அத்தகைய பிக்குவுக்கு ஏற்பாடு செய்வதற்கும்; ஏதேனும் பதிவு செய்யப்பட்ட கதிகாவத்தின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற பிக்குமாருக்குத் தண்டனை விதிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

*சுருக்கப் பெயர்.*

***1.*** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*கதிகாவத்தை வகுத்தமைத் தல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் "நிகாயா அல்லது மதப்பிரிவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒவ்வொரு தேரவாத பிக்கு நிகாயாவினதும் அல்லது மதப்பிரிவினதும் சங்க சபைச் செயற்குழு, இச்சட்டத்தின் நோக்கத்திற்காக, அந்த நிகாயா அல்லது மதப்பிரிவு தொடர்பான கதிகாவத் ஒன்றை வகுத்தமைத்து ஏற்றுக்கொள்ளலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு கதிகாவத்தும், மற்றவற்றுக்கிடையில் பின்வருவன தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இயைபான நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் சங்க சபைச் செயற்குழுவினது அமைப்பும் பணிகளும் ;

(ஆ) பிக்கு ஒருவர் நடந்துகொள்கையில் அவரினால் கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டிய நடத்தை மற்றும் ஒழுக்காற்றுக் கோவையொன்று ;

(இ) பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட நடத்தை மற்றும் ஒழுக்காற்றுக் கோவை எவரேனும் பிக்குவினால் மீறப்படும் விடயத்தில், விசாரணைகளை நடாத்தும் முறை ; அத்துடன்

(ஈ) அத்தகைய மீறுதல்களுக்கான தண்டனைகள்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நடத்தை மற்றும் ஒழுக்காற்றுக் கோவை -

(அ) மந்திர செயன்முறைகள் அல்லது இவற்றையொத்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அல்லது அவற்றை நிறைவேற்றுகின்ற மற்றும் அத்தகைய செயற்பாடுகளுக்குப் பிரசித்தம் கொடுக்கின்ற ;

(ஆ) வியாபார அல்லது தொழிற் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டிருக்கின்ற ;

(இ) சாரதி உரிமங்களைப் பெறுகின்ற மற்றும் வாகனங்களைச் செலுத்துகின்ற ;

(ஈ) கல்வி, சமூக சேவைகள் அல்லது மத அலுவல்கள் என்ற துறைகள் தவிர்ந்த, வேறு பகிரங்க அல்லது தனியார் துறையில் ஏதேனும் தொழிலில் ஈடுபடுகின்ற; அத்துடன்

(உ) பொது இடங்களில் பிக்குகளுக்கான ஒழுக்கத்துக்கு முரணானவொரு முறையில் பிக்கு ஒருவருக்குப் பொருத்தமற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற,

பிக்கு ஒருவர் தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, பின்வரும் தண்டனைகள் ஒரு கதிகாவத்தில் உள்ளடக்கப்படலாம் :-

(அ) வதிகின்ற பௌத்த கோயிலிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்படுதல் ;

(ஆ) வதிகின்ற பௌத்த கோயிலிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றப்படுதல் ;

(இ) விகாராதிபதிப் பதவியிலிருந்து தற்காலிகமாக அகற்றப்படுதல் ;

(ஈ) விகாராதிபதிப் பதவியிலிருந்து நிரந்தரமாக அகற்றப்படுதல் ;

(உ) மாணவ நிலையிலிருந்து வெளியேற்றப்படுதல் ;

(ஊ) இயைபான நிகாயாவிலிருந்து அல்லது மதப்பிரிவிலிருந்து வெளியேற்றப்படுதல் ; அத்துடன்

(எ) பிக்குவாகப் பதிவு செய்யப்பட்டமையை இல்லாதாக்குதல்.

*பதிவு செய்யப்படுவதற்காக கதிகாவத்தை ஆணையாளர் தலைமையதிபதியிடம் பதிவாளர் சமர்ப்பித்தல்.*

**3.** (1) இயைபான நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் பதிவாளர், 2 ஆம் பிரிவின்கீழ் வகுத்தமைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட கதிகாவத்தை, முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பமொன்றுடன் அந்த கதிகாவத் சங்க சபைச் செயற்குழுவினால் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற பொருள்பட அத்தகைய நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் அதிவணக்கத்துக்குரிய மஹாநாயக்க தேரரினால் கையொப்பமிடப்பட்ட கூற்றொன்றுடனும் சேர்த்து பதிவு செய்யப்படுவதற்காக ஆணையாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய விண்ணப்பத்தின் படிவமும் முறையும் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

*ஆணையாளர் தலைமை யதிபதி கதிகாவத்தை நிபுணர்கள் குழாத்திடம் சமர்ப்பித்தல்.*

**4.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பிக்கப்பட்ட கதிகாவத்தை, அத்தகைய கதிகாவத்-

(அ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்றதா ; அத்துடன்

(ஆ) பௌத்த தருமம், ஒழுக்கம் மற்றும் வழக்காறுகளுக்கு இணங்கியொழுகுகின்றதா,

என்பதைப் பரிசோதனை செய்வதற்கு 5 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழாத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) கதிவாகத் ஒன்றின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்றனவென நிபுணர்கள் குழாம் அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய அபிப்பிராயத்தை அது ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகும் வகையில் இயைபான கதிகாவத்தை மீளாய்வு செய்து பரிசோதனைக்காக அதனை நிபுணர்கள் குழாத்திடம் மீளச் சமர்ப்பிப்பதற்கென அவர் அதுபற்றி இயைபான மதப்பிரிவின் அல்லது நிகாயாவின் பதிவாளருக்கு அறிவித்தலும் வேண்டும்.

(3) கதிகாவத்தின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகவுள்ளவிடத்து, நிபுணர்கள் குழாம் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அப்பொருள்படச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

*நிபுணர்கள் குழாத்தை நியமித்தல்.*

**5.** அமைச்சர், அதிவணக்கத்துக்குரிய மூன்று நிகாயாவின் மஹாநாயக்க தேரர்களினதும் கலந்தாலோசனையுடன் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளின் எவையேனும் மீறுகைகளுக்கென அப்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கதிகாவத்தை பரீட்சிக்கும் நோக்கத்திற்கென பின்வரு வோரைக் கொண்டிருக்க வேண்டிய ஐந்து உறுப்பினர்களைக் கொண்டவொரு நிபுணர்கள் குழாத்தை நியமித்தல் வேண்டும் :-

(அ) மூன்று பௌத்த பிக்குமார்கள் ; அத்துடன்

(ஆ) பௌத்த பிக்குமார்கள் தொடர்பான ஒழுக்காற்று விதிகளுடன் பரிச்சயமுள்ள இரண்டு சட்டத்தரணிகள்.

கதிகாவத்தைப் பதிவு செய்தல்.

**6.** (1) நிபுணர்கள் குழாத்தின் சான்றிதழ் கிடைக்கப் பெற்றதன் மேல் ஆணையாளர் தலைமையதிபதி கதிகாவத்தைப் பதிவு செய்தல் வேண்டும்.

(2) கதிகாவத் பதிவு செய்யப்பட்டதன்மேல், ஆணையாளர் தலைமையதிபதி பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன் :-

(அ) பதிவுச் சான்றிதழை, பதிவு செய்யப்பட்ட கதிகாவத்தின் பிரதியொன்றுடன் சேர்த்து இயைபான நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் அதிவணக்கத்துக்குரிய மஹாநாயக்க தேரரிடம் நேரடியாக கையளித்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைப் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் தேரருக்கு அனுப்புதலும் வேண்டும்.

கதிகாவத்திற்கான திருத்தங்களைப் பதிவு செய்தல்.

**7.** (1) ஏதேனும் நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் இயைபான சங்க சபைச் செயற்குழு அவசியமானவிடத்து, 6 ஆம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கதிகாவத்திற்கான திருத்தங்களை ஏற்றுக் கொள்ளலாம்.

(2) இச்சட்டத்தின் 3 ஆம், 4 ஆம் பிரிவுகளில் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறை, ஒரு கதிகாவத்திற்காக ஏதேனும் திருத்தத்தைப் பதிவு செய்வதற்காக ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்டவொரு கதிகாவத்திற்கான எவையேனும் திருத்தங்களைப் பதிவு செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்ப மும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும்.

ஆணையாளர் தலைமையதிபதி, பதிவு செய்யப்பட்ட கதிகாவத் பற்றிய இடாப்பைப் பேணுதல்.

**8**. ஆணையாளர் தலைமையதிபதி, பதிவுசெய்யப்பட்ட கதிகாவத்திற்கும் பதிவுசெய்யப்பட்ட கதிகாவத்திற்கான திருத்தங் களுக்குமான இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

கதிகாவத்தின் ஏற்பாடுகளுக்கு பிக்கு இணங்கி யொழுகுதல்.

**9**. ஒரு நிகாயா அல்லது மதப்பிரிவு தொடர்பானவொரு கதிகாவத் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுமிடத்து -

(அ) அத்தகைய கதிகாவத்தின் ஏற்பாடுகள், அத்தகைய நிகாயாவை அல்லது மதப்பிரிவை சேர்ந்த ஒவ்வொரு பிக்குவுக்கும் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய நிகாயாவை அல்லது மதப்பிரிவைச் சேர்ந்த ஒவ்வொரு பிக்குவும் அத்தகைய கதிகாவத்தின் ஏற்பாடுகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தலும் வேண்டும். அவற்றுக்கிணங்க நடந்துகொள்ளுதலும் வேண்டும்.

கதிகாவத்தின் ஏற்பாடுகளை மீறுதல் தொடர்பாக விசாரணை நடாத்தப் படுதல்.

**10**. (1) பிக்கு ஒருவர் எந்த நிகாயாவை அல்லது மதப்பிரிவைச் சேர்ந்துள்ளாரோ அந்த நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் பதிவுசெய்யப்பட்ட கதிகாவத்தின் ஏற்பாடுகளை அத்தகைய பிக்கு மீறுமிடத்து, இயைபான நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் சங்க சபைச் செயற்குழு அதுதொடர்பில் விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட விசாரணையில், அத்தகைய கதிகாவத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரெனச் சார்த்தப்பட்ட பிக்குவுக்கு, கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்று அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) இயைபான நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் பதிவாளர், சங்க சபைச் செயற்குழுவின் முடிபை பதிவுசெய்யப்பட்ட கதிகாவத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரெனச் சார்த்தப்பட்ட

பிக்குவிடம் நேரடியாகக் கையளித்தல் வேண்டும் அல்லது அத்தகைய முடிபை பதிவஞ்சல்மூலம் அவருக்கு அனுப்புவதன் மூலம் அதுபற்றி அவருக்கு அறிவித்தல் வேண்டும்.

சங்க சபைச் செயற்குழுவின் முடிபுக்கு முரணாகச் செயலாற்றுதல் தவறொன்றாதல்.

**11.** (1) பதிவுசெய்யப்பட்டவொரு கதிகாவத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரெனச் சார்த்தப்பட்ட பிக்கு, சங்க சபைச் செயற்குழுவின் முடிபுக்கிணங்கச் செயலாற்றுதல் வேண்டும்.

(2) அத்தகைய முடிபுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற பிக்கு ஒருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

சார்த்தப்பட்ட மீறுநர், மதப்பிரிவை அல்லது நிகாயாவை மாற்றுவதன் மீதான தடை.

**12.** எந்த பிக்குவுக்கெதிராக 10 ஆம் பிரிவின் கீழான விசாரணையொன்று முடிவுறாதுள்ளதோ அல்லது எந்த பிக்கு இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ளாரோ அந்த பிக்கு ஒருவர், அத்தகைய பிக்கு எந்த நிகாயாவை அல்லது மதப்பிரிவைச் சேர்ந்துள்ளாரோ அந்த நிகாயா அல்லது மதப்பிரிவு தவிர்ந்த வேறு ஏதேனும் நிகாயாவினால் அல்லது மதப்பிரிவினால் பிக்கு ஒருவராக ஏற்றுக்கொள்ளப்படுதலோ அல்லது பதிவுசெய்யப்படுதலோ ஆகாது.

ஒழுங்கு விதிகள்.

**13.** (1) அமைச்சர், அதிவணக்கத்துக்குரிய மூன்று நிகாயாவின் மஹாநாயக்க தேரர்களின் கலந்தாலோசனையுடன் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அல்லது இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கு அல்லது ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் பின்வரும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் ;

(ஆ) மூன்று நிகாயாக்களின் மஹாநாயக்க தேரர்களினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பிக்குமாரினால் பயன்படுத்தப் படவேண்டிய உடையின் நிறத்தைக் குறித்துரைத்தல் ; அல்லது

(இ) இச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தேவைப்படுத்தப்பட்ட படிவங்களை விதித்துரைத்தல்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக, பாராளுமன்றத்தின் முன்னர் அதன் அங்கீகாரத்துக்காகக் கொணரப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, சொல்லப்பட்ட அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஆணையாளர் தலைமை யதிபதியினால் வழங்கப்பட்ட ஆவணங்களின் எண்பிப்பு.

**14.** (1) ஆணையாளர் தலைமையதிபதியினால் முறையாகக் கையொப்பமிடப்பட்டு சான்றுபடுத்தப்பட்ட ஒவ்வோர் ஆவண மும், அதன் கண் அடங்கியுள்ள கையொப்பங்கள் முறையான கையொப்பங்களென எண்பிப்பதற்கு ஏதேனும் சான்றில்லாம லும் மற்றும் அத்தகைய அலுவலர் சாட்சியொருவராக அழைக் கப்படாமலும் ஏதேனும் நீதிமன்றத்தில் சான்றாக ஏற்கப்படுதல் வேண்டுமென்பதுடன், முரண்பாடு எண்பிக்கப்படும்வரை, அதன்கண் குறிப்பிட்ட விடயங்கள் பற்றிப் போதிய சான்றாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆவணம் பொய்யானவோர் ஆவணமென அல்லது அதன்கண் அடங்கி யுள்ள கையொப்பங்கள் பொய்யான கையொப்பங்களென எவரேனுமாள் சார்த்துமிடத்து, அத்தகைய நிகழ்வை எண்பிப் பதற்கான பொறுப்பு அவ்வாளைச் சார்ந்ததாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக 'ஆவணம்' என்பது, ஏதேனும் கோப்பு, கட்டளை, பணிப்புரை, அறிக்கை அல்லது வேறேதேனும் இயைபான எழுத்து என்பவற்றை உள்ளடக்கும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**16.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய -

''பிக்கு'' என்பது, (318 ஆம் அத்தியாயமான) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

“கோயில்” என்பது, ஏதேனும் சைத்திய, ஸ்தூபம், பிக்கு வதிவிடம் அல்லது புத்தபெருமானின் போத னைக்கிணங்கத் தாபிக்கப்பட்டவையும் “ஷரீரிக்கா”, “பாரிபோகிக்கா” மற்றும் “உத்தேசிக்கா” என வழைக்கப்பட்டவையுமான ஒன்று, இரண்டு அல்லது மூன்று முக்கூறான ஸ்தூபங்களும் அல்லது பொதுமக்கள் வணங்கி வழிபடுவதும் பொதுஇட மொன்றில் அமைந்துள்ளதுமான பௌத்த புனிதத் தலம் என்று பொருளாகும் ;

“மதப்பிரிவு” என்பது, இலங்கையிலுள்ள மூன்று தேரவாத பிக்கு நிகாயாக்களுள் எதன்கீழும் தாபிக்கப்பட்ட ஏதேனும் மதப்பிரிவு என்று பொருளாகும் ;

“ஆணையாளர் தலைமையதிபதி” என்பது, பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும் ;

“சங்க சபைச் செயற்குழு” என்பது, ஒரு தேரவாத பிக்கு நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் நிருவாக நோக்கத் துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க சபை என்று பொருள்படும் ;

“கதிகாவத்” ஆனது அத்தகைய கதிகாவத்திற்கு ஆக்கப்படும் ஏதேனும் திருத்தத்தினை உள்ளடக்குகின்றது ;

“அமைச்சர்” என்பது, புத்தசாசன அலுவல்கள் எனும் விடயத்திற்கு குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சர் என்று பொருளாகும் ;

“பதிவாளர்” என்பது, ஒரு நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் சங்க சபைச் செயற்குழுவின் உறுப்பினராகவுள்ள, சொல்லப்பட்ட நிகாயாவின் அல்லது மதப்பிரிவின் செயலாளர் அல்லது கூட்டுச்செயலாளர் என்று பொரு ளாகும் ;

“தேரவாத பிக்கு நிகாயா” என்பது, “ஷியாமோபாலி மஹா நிகாயா”, “ஸ்ரீலங்கா அமரபுர மஹா நிகாயா” மற்றும் “ஸ்ரீலங்கா ராமக்ன மஹா நிகாயா” என்பனவாகத் தேரவாத பாரம்பரியத்துக்கிணங்க இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று நிகாயாக்கள் என்று பொருளாகும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*